**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**
**CASE NO.SC.130/2019**
**Deposition of P.W. 1**

Name : சந்திரசேகர்
S/o, D/o, W/o :
Caste :
Religion :
Village :
Taluk :
Calling :
Age :
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of
**Dated:26.07.2023**
(Accused present.)

**முதல் விசாரணை-**

நான் வேளிமலை, பெருஞ்சிலம்பு, விளாகுளத்தில் குடியிருந்து வருகிறேன். நான் வழக்கு சம்பவ காலத்தில் தங்கநாடார் என்பவரது தோட்டத்தில் மேற்பார்வையாளராக பணியாற்றி வந்தேன். இவ்வழக்கின் எதிரி சுரேஷ் என்பவரை எனக்குத் தெரியும். 14.01.2018 ம் தேதி நான் வேலை முடித்து விட்டு வீட்டிற்கு மாலை சுமார் 05.00 மணியளவில் வந்தேன். அப்போது எனது மனைவி என்னிடம் எதிரி வீட்டிற்கு வந்து என்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டியும், கெட்டவார்த்தையால் ஏசியதாகவும் கூறினார். மேலும் என்னை அருவாளால் வெட்டி விடுவதாகவும் எதிரி கூறிவிட்டு சென்றதாக எனது மனைவி என்னிடம் கூறினார். அதன் பிறகு நான் வீட்டிற்கு வேண்டிய சாதனம் வாங்குவதற்காக பெருஞ்சிலம்பிற்கு சென்று விட்டு எனது நண்பர் ரெஜி என்பவரது இருசக்கர வாகனத்தில் அவர் ஓட்ட நான் பின்னால் அமர்ந்து வந்துக் கொண்டிருந்த போது சடையாறு சப்பாத்து ரோட்டில் வைத்து மாலை சுமார் 05.45 மணியளவில் எதிரி ஸ்கூட்டி இருசக்கர வாகனத்தில் வந்து நாங்கள் வந்த இருசக்கர வாகனத்தை மறித்து எதிரி தான் வந்த வாகனத்தில் மறைத்து வைத்திருந்த அருவாளை எடுத்து எனது கழுத்தை நோக்கி வெட்ட முயற்சித்த போது நான் அதை தடுத்ததால் எனது இடது முழுங்கையில் வெட்டுப்பட்டது. அதனால் நான் சத்தம் போட்டேன். அதனால் ராஜசேகர், தர்மராஜ் மற்றும் நிறைய நபர்கள் ஓடி வந்தார்கள். உடனே எதிரி நாங்கள்

வந்த இருசக்கர வாகனத்தில் அருவாளால் அடித்து விட்டு தன்னுடைய ஸ்கூட்டி இருசக்கர வாகனத்தை எடுத்து சென்று விட்டார். பின்னர் என்னை ரெஜி என்பவர் தக்கலை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேர்த்தார். மருத்துவமனையில் வைத்து போலிசார் என்னை விசாரணை செய்த போது போலிசாரிடம் வழக்கு சம்பவம் குறித்து நான் புகார் வாக்குமூலம் கொடுத்தேன். நான் சொல்ல, சொல்ல போலிசார் எழுதிக் கொண்டார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது ஆகும். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது, மேற்படி புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1. இவ்வழக்கு சம்மந்தமாக என்னை கொற்றிக்கோடு போலிசார் விசாரணை செய்தார்கள்.

(முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது).